

மக்கள் விடுதலை

# புதியமனிதன்

இலக்கிய இதழ்

இதழ் எண் : 93 மகிழ்ச்சிக்கு வழி மார்க்சியமே சூலை 1 - 2022




## திரைக்குப் பின்னாலும் கதை உண்டு

இயக்குனர் ருத்ரன்

## அக்னிப் பாதையல்ல அபாயப் பாதை



**புதிய மனிதன்**
இலக்கிய மாத இதழ்
இதழ் எண் : 93 சூலை 1 - 2022

பொறுப்பாசிரியர்
**பாட்டாளி**
ஆசிரியர்
**ஜெ. சிதம்பரநாதன்**
ஆசிரியர் குழு
**பேரா. திருமா**
**விடுதலைக்குமரன்**
**மு. மணிகண்டன்**
வடிவமைப்பு
**பாட்டாளி**

மின்னஞ்சல் முகவரி
puthiyamanithanithazh@gmail.com
வலைப்பூ
puthiyamanithanithazh.blogspot.com
புலன எண் (வாட்ஸ் ஆப்)
94435 45262

# நுழைவாயில்

தலையங்கம்
அக்கினிப் பாதையல்ல அபாயப் பாதை 3
கவிதை வெளி
வெற்றிப்பேரொளி 11
நவஜீவன் 14
பாரதிசந்திரன் 16
சிறுகதை வெளி
நீலன் 18
அஞ்சலி
கட்டுரை வெளி
இயக்குனர் ருத்ரன் 32
மக்கள் விடுதலை பண்பாட்டுப் பேரியக்கத்தின் புதிய உதயங்கள் 50

# அக்கினிப் பாதையல்ல... அபாயப் பாதை

அது 1922. அப்போது இத்தாலியில் பாசிச ஆட்சியை நிறுவி-யிருந்தார் முசோலினி.

அதே பாசிச மனநிலையைக் கொண்டிருக்கும் இன்றைய பாசகவின் தாய்தான் அன்றைய இந்து மகா சபை. அந்த இந்து மகா சபையின் பார்வை உடனே இத்தாலியின் மீது திரும்பியது.

அப்போது இந்து மகாசபையின் தலைவராக இருந்தவர் சாவர்க்கர். இந்து மகா சபையின் ஆதரவுப் பத்திரிகைகளுள் ஒன்றான 'கேசரி' யில் இத்தாலியின் பாசிச வடிவத்தையும், முசோலினியையும் சிலாகித்து, பாசிசத்தைப் பரப்பும் நோக்கில் கட்டுரைகளும், தலையங்கங்களும் தொடர்ந்து எழுதப்பட்டன. விதந்தோதப்பட்டன.

பாசிச இயக்க வடிவத்தில் அதீத ஆர்வம் கொண்ட இந்து மகா சபை-யினர் இந்திய ஒன்றியத்தை வன்முறை வழியிலோ அல்லது பயங்கரவாத நடவடிக்கைகள் மூலமாகவோ அன்றி எந்தவொரு வழியிலானலும் சரி. எத்தனை எத்தனை மனித உயிர்களைக் காவு கொடுத்தா-யினும் சரி. ஒரு அகண்ட



பாரத இந்து தேசியத்தை இம் மண்ணில் நிர்மாணிக்க வேண்டும் கட்டமைக்க வேண்டும் என்கிற ஒற்றைப்பாசிச நோக்கம் கொண்ட இந்து மகாசபையினர் அதற்கான செயல்வடிவ அமைப்புகளை இயக்கங்களை பல்வேறு வடிவங்களில் உருவாக்கி வந்தனர். அதன்படி 1925 இல், ஆரம்பிக்கப்பட்ட ஒரு அமைப்பே ராஷ்டிர சுயம் சேவக் சங் (ஆர்.எஸ்.எஸ்.) என்கிற தனித்ததொரு இயக்கம்.

இந்து மகா சபையின் முக்கியத் தலைவராக இருந்தவர் டாக்டர் மூஞ்சே. அவரின் வழிகாட்டுதலில், மூஞ்சேவின் சீடரும் ஆர்.எஸ்.எஸ். நிறுவனர்களில் ஒருவருமான டாக்டர் ஹெட்கேவர் ஆர்.எஸ்.எஸ்.இன் முதல் தலைவரானார்.

1931 இல் முதல் வட்ட மேசை மாநாட்டில் பங்கேற்ற மூஞ்சே, இலண்டனிலிருந்து திரும்பும் வழியில் இத்தாலிக்குச் சென்றார். அங்கே, முசோலினியின் பாசிச அரசால் நடத்தப்பட்ட இராணுவப் பள்ளிகளை, இராணுவக் கல்லூரிகளையும், பாசிஸ்டுகளின் உடற்பயிற்சிக் கூடங்களையும், கல்வி நிறுவனங்களையும் பார்வையிட்டார்.

ஆறு வயதிலிருந்து பதினெட்டு வயதுவரையிலான சிறார்களைத் தேர்வு செய்து அவர்களுக்கு ஆயுதப் பயிற்சிகளையும் வன்முறைச் சிந்தனைகளையும் அடிப்படையிலேயே அந்தப் பிஞ்சு மனங்களில் நஞ்செனவிதைக்க... அந்தச்சின்னஞ்சிறுச் சிறார்கள் வளர வளர பாசிசக் கொடும் விருட்சமாகத்தானே விளங்குவார்கள். இதில்

மாற்றுக் கருத்துகள் உண்டா என்ன?

முசோலினியின் பாசிச இயக்கத்தையும் பாசிச அரசையும் பார்த்து வியந்த மூஞ்சே, இதுதான் சரியான இயக்கவடிவம் என்று உறுதியாக முடிவெடுத்தார். ஏற்கெனவே இந்திய ஒன்றியத்தில் வன்முறை வழியிலான இந்து அடிப்படைவாதத்திற்கு நீண்டதொரு சாதகமான பக்கபலமான வரலாற்றுத் தொடர்ச்சி இருக்கிறது. அதை திலகர், சவார்க்கர், ஹெட்கேவர் உள்ளிட்ட பலரும் இயக்கமாக அமைப்பாக வடிவமைத்து அதைச் செயலாக்கி வந்தபோதிலும், மூஞ்சேவிற்கு நவீன இராணுவ மிடுக்குடன் கூடிய இத்தாலியின் பாசிச வடிவமும் உருவாக்கமுமே மிகவும் பிடித்துப் போயின. இத்தாலிப் பாசிச வடிவத்தை இந்திய இந்துத்துவச் செயற்பாட்டில் இணைப்பதன் மூலம் புதிய இந்துத்துவ இராணுவத் தேசிய உருவாக்கம் சிறப்பாக அமையும் என்று மூஞ்சே கருதினார்.

1931 மார்ச் 19 இல், இத்தாலி பாசிச அரசின் சர்வதிகாரி முசோலினியைச் சந்தித்த மூஞ்சே, "உயர்வை விரும்பும், வளர்ந்துகொண்டிருக்கும் ஒவ்வொரு நாட்டிற்கும்,



தாங்கள் வழிநடத்துவதைப் போன்ற பாசிச அமைப்புகள் தேவை" என்று துதிபாடிவிட்டு பாசிச இந்துத்துவ இந்தியக் கனவினைக் கண்டபடியே இந்தியா வந்து சேர்ந்தார். அதைத் தொடர்ந்துதான், இந்துக்களை இராணுவ மயமாக்க வேண்டும் என்கிற செயல்திட்டத்தை ஆர்.எஸ்.எஸ்.இன் செயல்திட்டமாக தமது சீடர் ஹெட்கேவர் மூலம் செயல்படுத்தினார் மூஞ்சே.

இந்து மகா சபையிடம் ஏற்கனவே இத்தகைய செயற்பாடுகள் இருந்தாலும் கூட, ஆர்.எஸ்.எஸ்.தான் அதை முசோலினியின் இராணுவ பள்ளி மாதிரியில் நடைமுறைப்படுத்தியது. அதன் தொடர்ச்சியாகத்தான், ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தால், ஷாகா எனும் வகுப்புகள் உள்ளிட்ட பலவிதமான பயிற்சிகள் நடத்தப்படுகின்றன.

அதன்பிறகு மெல்ல மெல்ல இந்திய ஒன்றியத்தில் வாழும் பல்வேறு தேசிய இன மக்களிடையே மத அடிப்படைவாதத்தைப் புகுத்தி பிற மத மக்களின் மீதான வெறுப்புணர்ச்சியை உருவாக்கி ஊடுருவி தேர்தல் அரசியலுக்கென ஒரு முகத்தை உருவாக்கி அதைச் தேசிய அரசியல் கட்சியாகப் பெரிதாக்கி நாடாளுமன்றத்தில் மூன்று இருக்கைகள் பின் முப்பது இருக்கைகள் எனத் தொடர்ந்து பதிமூன்று நாட்கள் பின் பதிமூன்று மாதங்கள் என ஆட்சிக் கட்டிலைப் பிடித்து பின்னர் கூட்டணியாக ஆட்சிக் கட்டிலைப்பிடித்து இப்போது கடந்த பத்தாண்டுகளாக தனிப் பெருங் கட்சியாக

வலுவாக ஆட்சி அதிகாரத்தில் அமர்ந்து கொண்டுவிட்டது இந்துத்துவம். ஆட்சிக் அதிகாரத்தில் அமர்ந்த நாள் கொண்டு தனது மூலாதாரத் திட்டங்களை ஒவ்வொன்றாக ஒன்றன்பின் ஒன்றாக அமல்படுத்தி வருகிறது அதன் வரிசையில்தான் இப்போது இந்த அக்னிபாத் திட்டம் வந்திருக்கிறது.

அன்றைக்கு முசோலினியிடம் “இத்தாலி பாசிசம் சிறார்களுக்கு இராணுவ பயிற்சி கொடுப்பதைக் கண்டு நான் ஆர்வம் கொள்கிறேன்” என்று கூறினார் மூஞ்சே. இன்றைக்கு பதினேழுரை வயதுச் சிறார்களை இராணுவப் பயிற்சிக்கு அழைக்கிறது பாஜக அரசு. அவர்களுக்கு அக்கினி வீரர்கள் என்கிற பட்டமும் அளிக்கிறது

மோடி தலைமையிலான இந்துத்துவ அரசின் திட்டம்தான் என்ன? இராணுவத்துறையில் ‘அக்னி பாத்’ எனும் புதிய திட்டத்தைக் கொண்டுவருகிறார்கள். இதனை ஆங்கிலத்தில் ‘Tour of Duty’ என்று அழைக்கிறார்கள்.



முழுக்க முழுக்க ஒப்பந்த அடிப்படையில் 17.5 வயது முதல் 21 வயதுவரை உள்ள துடிதுடிப்பான இளைஞர்களைத் தேர்வுசெய்து, ஆண்டுக்கு 45 ஆயிரம் வீரர்கள் இராணுவ முப்படைகளில் சேர்க்கப்படுவார்கள். இவர்களின் பணிக்காலம் நான்கு ஆண்டுகள் மட்டுமே. நான்காண்டுகளுக்குப் பிறகு இவர்களில் தகுதியுடையவர் என 25 சதவீதத்தினர் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களை 15 ஆண்டு காலத்திற்கு தொடர் பணியில் அமர்த்தப்படுவார்கள். மீதி 75 சதவீதத்தினர் வீட்டுக்கு அனுப்பப்படுவார்கள். நான்காண்டுகள் பயிற்சி பெற்று பணி முடித்து வீட்டுக்குத் திருப்பி அனுப்பப்படுபவர்களுக்கு ஓய்வூதியம் எதுவுமில்லை. அவர்களின் மாத ஊதியத்திலிருந்து சுமார் ரூ. 9 ஆயிரம் முதல் ரூ.12 ஆயிரம் வரை பிடித்தம் செய்து, அதே அளவுக்கு அரசும் தொகை செலுத்தி, நான்காண்டு முடிவில் ரூ.12 இலட்சம் வரை அளிக்கப்படும். அதாவது நாய் வாலை நறுக்கி நாய்க்கே சூப் கொடுப்பதுபோல. நான்காண்டுகளுக்கு பிறகு பணியிலிருந்து திரும்புகிறவர்களுக்கு ஓய்வு பெற்ற இராணுவத்தினருக்கான எந்த உரிமையும் சலுகையும் அளிக்கப்படாது.

இந்த அக்கினி வீரர்கள் நான்காண்டுகள் இராணுவப் பயிற்சி கொடுக்கப்பட்ட இளைஞர்கள். நவீன ரகத் துப்பாக்கிகள் உள்ளிட்ட கருவிகளை நன்கு இயக்கத் தெரிந்த இளைஞர்கள். இப்படியான இளைஞர்கள் வேலையின்றி ஊதியமின்றி

விரக்தியில் திரிவது என்பது அந்தந்தத் தேசிய இனங்களின் பொது அமைதிக்கே ஆபத்தானது. வேலை வாய்ப்பை இழந்து வெளியேறும் அந்த அக்கினி வீர இளைஞர் பட்டாளத்தை இந்துத்துவ அரசியலுக்குள் எளிதாக இழுத்து வந்து, இந்துத்துவ பாசிச தனியார் இராணுவத்தை வலிமையாக கட்டமைத்து, இந்திய ஒன்றியத்தை முழுமையான இந்துத்துவப் பாசிச நாடாக ஆக்க பாஜக திட்டம் தீட்டுகிறது. அதற்கான ஒரு திட்டம்தான், இந்த அக்னி பாத்.

மோடி தலைமையிலான இந்துத்துவ அரசால் கொண்டுவரப்படும் இந்த அக்னி பாத் திட்டமும் அதற்கான இராணுவப் பயிற்சியும் ஷாகா வகையிலானது என்பதுதான் இங்கே முக்கியமானது. அரசு செலவிலான ஷாகாவே அக்கினி பாத் திட்டம்.

இது ஏதோ நசிந்து கொண்டுவரும் இந்திய ஒன்றியப் பொருளாதாரத்தைத் தூக்கி நிலைநிறுத்த




ஆட்சியாளர்களால் கொண்டுவரப்பட்ட செலவுக் குறைப்புத் திட்டமல்ல. அல்லது மற்ற எல்லோரும் கருதுவதுபோல அரசுப் பணியை வெறும் ஒப்பந்தப் பணியாக மாற்றும் திட்டமுமல்ல.

மாறாக இதுவரை பக்தி நம்பிக்கையால் வெறும் கடவுள்களை மட்டுமே கும்பிட்டுவந்து கொண்டிருந்த சாதாரணக் குடிகளை ராணுவப் பணி என்கிற போர்வையில் ஆயுதப் பயிற்சி கொடுத்து திட்டமிட்டதொரு பாசிசப் படையைக் தீவிர இந்துத்துவ ஷாகா படையைக் குடிமக்களிடமிருந்தே கட்டித் திரட்டிக் கொள்ளும் ஏற்பாடே இந்த அக்கினிப் பாதைத் திட்டம் என்கிற பேராபாயத் திட்டம் என்பதை உணரவேண்டும் நாம்.

ஆம். இது அக்கினிப் பாதையல்ல. பாசிச அபாயப் பாதை.

**பாட்டாளி**

பொறுப்பாசிரியர்



# வயல்வீதித் தேர்!

வெற்றிப்பேரொளி

**பொ**ன்னியாறு பெருகியோடி பொன்விளைத்துக் கொடுக்கும்
புதுநெல்லின் எழுகுவியல் பொன்மலையாய்மினுக்கும்!
மின்னிவயல் வரப்பதனில் வஞ்சிமகள் நடக்கும்
மெல்லிடையும் ஒடியுமென கஞ்சிக்கலயம் சுமக்கும்!



# புதிய மனிதன்

வளமண்ணின் உயிர்நாதம் வண்டலெனச் சேரும்
வயல்வீதித் தேரெனவே வரும்கலப்பை ஏரும்!
களத்துமேட்டுக் கண்டுமுதல் கழிஉவகை யூட்டும்
கனவுகளின் மூட்டைகளை கண்களிலே ஏற்றும்!

வரப்புகளில் நின்றுகுடை பிடித்திருக்கும் பண்ணை
வளர்களையைப் பறிப்பவள்மேல் வைத்திருக்கும் கண்ணை!
வரப்பினிலே தலைசாய்க்கும் தங்கசம்பாக் கதிரும்
வீடுவந்து சேரும்போது விழிமணிகள் உதிரும்!

வயலோடி மண்வெட்டி வரப்புகளை மாற்றும்
வழக்குமன்றக் கூண்டுகளில் உழவனையே ஏற்றும்!
புயல்வெள்ளம் இடையிடையே புகுந்துசெய்யும் கேடு
பொறுமையுடன் கடந்துவரும் வேளானுயிர்க் கூடு!

## புதிய மனிதன்

உரமிட்டுப் பயிர்வளர்க்கும் உயர்தொழிலின் ஆளும்
ஒருநூறு முறைவரப்பில் நடந்திருப்பான் நாளும்!
சுரந்தோடும் வியர்வைதனில் தழைப்பதுவே வாழ்க்கை
சாமிபூமி வயல்வரப்பு காப்பதவன் வேட்கை!

வரப்பென்னும் நரம்போடும் வயலுடல்தான் நிலமே
வடித்தெடுத்த நல்லுணர்வு வழிநடத்தும் நலமே!
வரமென்று வரப்பிருந்து வயலினையே வணங்கும்
வாழ்வுடையோன் அவனால்தான் வையமதும்
இயங்கும்!



# நவஜீவன் கவிதை

வெற்றி என்பது
கிடைத்தற்கரிய வாய்ப்பு
தோல்வி செரித்தற்கரிய
இழப்பு
கைநழுவிய வாய்ப்பு
மீளக் கிடைக்கலாம்
கைகழுவிப்போன
கொடுப்பினை
என்றென்றும் இழப்புதான்
அது மரணத்தைப் போல
இறுதியானது.
மற்றவர்க்கு மாற்றித்தர
இயலாதது.
படிக்கல்லான
தோல்விகளைவிட
நடுகற்களானவையே ஏராளம்.

தோல்வி
துருவேறிய அம்பொன்றின்
முறிந்த நுனியை
இருதயத்தில் இறுத்திவிட்டுப்
போகிறது
சடுதியில் பிடுங்கி



## புதிய மனிதன்

எறிந்துவிட்டுப்போக
இதுவொன்றும்
காலில்தைத்த கருவேல முள்
அல்லவே?
நினைவுகள் நெருடுகிற
போதெல்லாம்
காயங்கள் கண்விழிக்கின்றன
இந்த ஊமைக்காயங்கள்
சாமக்கோடங்கிகள்
தலைக்கோழி
கூவும்போதுதான்
தலைவிரி ஆட்டம் தளர்ந்து
ஓய்கிறது
காலம் காயம் ஆற்றும்
களிம்புதான்
அது அற்புதமானது
ஆனால் காயம்பட்டவன்
ஆயுள் சொற்பமானது
மனிதன் எதையும்
கடந்துசெல்வதில்லை
காலொடிந்த குதிரை
ஓடை தாண்டுவதெப்படி?

ஆற்றுப்படுத்துவதாகச்
சொல்லும் வார்த்தைகள்
வெந்தபுண்ணில்
ஈமொய்க்கும்
இம்சை
விட்டுவிடுங்கள்
சிங்கம் அதன் காயத்தைத்
தன் நாவாலேயே
நக்கிக் கொள்ளட்டும்
வெள்ளப் பெருக்கு
தன்வடிகாலைத் தானே
தேடிக்கொள்ளும்

# பாரதிசந்திரன் கவிதைகள்

தனிமையும் தேடலுமே
தலைசிறந்த மருந்துகள்
தோல்வியுற்ற மனிதனிடம்
தத்துவங்கள் கூறாதீர்
முடிந்தால்
காகிதமும் பேனாவும்
தாருங்கள்
அவர்கள் உங்களிடம் சொல்ல
ஏராளமாய் உண்டு
காத்திரமான கவிதைகள்.

**சி**ந்தனைக் கயிறு அறுத்து
இருளுக்குள் பொத்தென்று
இருளாகி விடப்
பழகியிருந்தேன்.

ஆழமான அதன் பகுதிக்குள்
பொதிந்த பொழுது
எங்கும் வியாபித்து இருக்க
அது மெல்லியதானதாகிப்
படரப் படர



# புதிய மனிதன்

மேலே அக்கம் பக்கம்
எல்லாமும் ஆகிப்போனது.

எல்லாமுமாக நானே
எதுவுமான எனக்குள்
நிச்சலனத்தை வாசித்தேன்.
இதுவரை ஒளிந்து
போயிருந்த உலகு
விஸ்வரூபமாய் மாறி அதுவே
ஜீரணிக்கிறது.

மௌனமாய் இயங்குகிறேன்
இரவோடு இருளாய்
இருட்டாய் ஆகி
பிரபஞ்சத்தோடு கலக்கிறேன்.

சுகத்தின் பிறப்பாய்
விடியாது
அப்பிக் கொள்கிறேன்
என்னை....

சிலந்தி வலை பின்னிய
செவி தேடி அலைகிறது
என் வார்த்தைப் பூச்சி...
தின்னட்டும்....
கக்கி வாந்தி எடுப்பதைக்
காட்டிலும்
இது எனக்கானது
என்னைப் பிடித்துத்
தின்னட்டும்

எங்கு பார்த்தாலும்
நீண்ட நேரம் என்னுடன்
நின்றே செல்கிறது
அந்த வெள்ளை நிற
அம்புலன்ஸ் வண்டி.
என் தங்கையின்
நினைவுகளைச் சுமந்தபடி.....

# பிழையான சொற்கள்

நீலன்

அது ஒரு கொண்டாட்ட சாவு. மாலை ஆறு மணிக்கு இறந்ததாகவும் மறு நாள்தான் அடக்கம் செய்வார்கள் என்றும், நீங்கள் காலையிலே வந்துவிட வேண்டும் எனவும் இறப்புச் செய்திச் சொல்ல வந்த இரு இளைஞர்கள் சொன்னார்கள். அவ்விரு இளைஞர்களிடம் ஐம்பது ரூபாய் கொடுத்து வழியனுப்பி வைத்தேன்.

“மொத ஆளே ஐம்பது ரூபாய் கொடுத்து இருக்கிறார், அப்போ நமக்கு நல்ல வசூல் ஆகும்டேனு” அந்த இளைஞர்கள் பேசிக் கொண்டு போனது என் காதில் விழுந்தது.

மறுநாள் எனக்கு வேலை இருப்பதால், அன்று இரவு ஒன்பது மணிக்கே அந்த இறப்பு வீட்டிற்குப் போய்விட்டேன். இறந்து போனது நண்பனின் அம்மா பூங்கோதை. நல்லா வாழ்ந்தவள். வயசு ஆனவள்தான், ஆனாலும் இன்னும் கொஞ்சகாலம்



வாழ்ந்திருக்கலாம். அவ்வளவு அன்பான படர்ந்த முகம். நண்பனின் கைகளை இறுகப் பற்றிக்கொண்டு அருகில் அமர்ந்திருந்தேன். எதுவும் பேசவில்லை. சிறிது நேரம் கழித்து,

"நண்பர்கள் எல்லோரிடமும் தகவலை சொல்லிடுடா"னு தழுதழுத்த குரலில் நண்பனே மௌனம் கலைத்தான். நண்பர்களிடம் தகவலைச் சொல்லிக் கொண்டிருந்தேன். அப்பொழுது மிகவும் பரிச்சயமான குரல் தெரு முனையில் இருந்து அழுது கொண்டு வருவது என் காதில் விழுந்தது.

"அம்மா என்ன விட்டுட்டு போயிட்டியே, இனிமே எனக்கு யார் இருக்கா?" என்னும் அந்தக் குரல் பூங்கோதையின் ஒரே மகள் அக்கா தேவகியின் குரல்.

தேவகியை மட்டும் அல்ல, என்னையும் விட்டுட்டுதான் போய்ட்டா பூங்கோதை அம்மா. நான் எப்பொழுது போனாலும், சாப்டியானு கேட்டு சாப்பிட வைப்பவள்தான் இறந்து கிடக்கிறாள். இனி இந்த வீட்டில், என்னை வரவேற்க



## புதிய மனிதன்

பூங்கோதை அம்மா இல்லை. என்னைக் கண்டதும் சமைத்துச் சுடச்சுடச் சோறு போடும் பூங்கோதை அம்மாவை இனிப் பார்க்கவே முடியாது. ஒரு வீட்டில் அம்மா இறந்து விட்டாள் என்றால், அந்த வீடு மட்டுமல்ல, வீட்டோடு தொடர்புடைய எல்லாவற்றையும் கைவிட்டு விடுகிறாள். இனி அந்த வீடு வேறொரு வீடாக இருக்கும். அந்த வீட்டிற்கான உறவுகள் அறுந்து கிடக்கும்.

கும்பகோணத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட ஆறுமுகம் நையாண்டி மேளம், மற்றும் ஆட்டக்காரர்களுடன் வந்து சேர்ந்துவிட்டான். ஆட்டக்காரர்களை பார்க்கும் ஆவலில் அந்தச் சாவு வீடு மெல்ல மெல்ல கொண்டாட்ட வீடாக மாறிப்போனது. எப்படியும் மறுநாள் மாலை ஐந்து மணி ஆகிவிடும் பூங்கோதை அம்மாவை அடக்கம் செய்வதற்கு. அதுவரை இந்தத் தெருவில் யாரும் உலை வைக்கப் போவதில்லை. பசியோடு இருப்பவர்களுக்கு ரவா கஞ்சி வைத்து கொடுத்துக் கொண்டிருக்கிறாள் ரஞ்சிதம் அத்த. பூங்கோதைக்கு இரண்டு நாத்தனார். இரண்டாவது நாத்தனார்தான் ரஞ்சிதம் அத்த. ரஞ்சிதம் அத்தையும், தேவகி அக்காவையும் பார்ப்பதற்கு ஒரே மாதிரி இருப்பாங்க. இதனாலவே பூங்கோதை அம்மா, ரஞ்சிதம் மேல ரொம்பப் பாசமா இருந்தாங்க.


இருபது ஆயிரம் பணம் மற்றும் ஏடிஎம் கார்டை என்னிடம் கொடுத்து, இறுதிச்சடங்கிற்கான எல்லாப் பணிகளையும் பார்க்கும்படி நண்பன் கூறினான். ஊர்ப் பெரியவர்களிடம் பேசிக்

கொண்டிருந்தபோது, என்னிடம் செய்திச் சொல்ல வந்த அந்த இரு இளைஞர்களும் வந்தார்கள்.

"அண்ணா நீங்க எப்ப வந்தீங்க?"

"தம்பி! நல்ல வசூல் ஆச்சா?"

"ம்ம்ம்.. நீங்க தொடங்கி வச்சிங்க, நல்ல வசூல் ஆச்சுண்ணா... அண்ணா... அண்ணன் உங்கள்ட்ட இத கொடுக்கச் சொன்னாங்க.



இரண்டு ஆப், கப், வாட்டர் இருக்குணா. சைடிஸ் வாங்க காசு பத்தலணா".

"நான் ஒன்பது மணிக்கே வந்துட்டேன். நீங்க இப்பதான் வர்றிங்களா?"

"ஆமாண்ணா, கொடுத்த ஊர்க்கெல்லாம் செய்தி சொல்லிட்டு இப்போதான் வர்றோம்ணா"

"பரவாயில்லை தம்பி. இந்தாங்க சாவி. அப்படியே வண்டி டிக்கில வச்சுடுங்க"ன்னு சொல்லிட்டு, நேரத்தைப் பார்த்தேன்.

## புதிய மனிதன்

கழுவுற மீனுல நழுவுற மீனா அக்கூட்டத்தில் இருந்து நழுவி வண்டிய எடுத்தேன். எனக்கு முன் ஒரு பெண் அவசர அவசரமாக நடந்து போய்க்கொண்டிருந்தாள். நடப்பதற்கும் ஓடுவதற்கும் இடையேயான அவளின் வேகம் வண்டியின் வெளிச்சத்தில் தெரிந்தது. அவளைக் கடந்து செல்லும்போது பார்த்தேன். அந்தத் துயரம் படர்ந்து தோய்ந்த கண்கள் என்னை நில் என்று சொன்னது. கொஞ்சம் தூரம் போனதும், ஓர் அடி பம்பு இருந்தது. வண்டிய நிறுத்தி முகம் கழுவதுபோல் கழுவிக் கொண்டிருந்தேன். அதே வேகத்துடன் அவள் வருவது தெரிந்தது. வண்டியில் உட்கார்ந்து திரும்பிப் பார்த்தேன். யாராவது பார்க்கிறார்களா என அவளும் திரும்பிப் பார்த்துவிட்டு ஓடிவந்து வண்டியில் ஏறினாள்.

முதல் முறையாக இரவு நேரத்தில் இன்னொருவன் மனைவியை அழைத்துப் போகிறேன். ஆம், அவள் ஓடி வந்து வண்டியில் ஏறியபோது தாலிச் சரடிலிருந்த தாலி அந்த இரவின் நிலவின் வெளிச்சத்தில் பளீரென ஒரு கணம் மின்னியது. இதே மின்னல் ஒளியை அம்மாவிடம் பார்த்திருக்கிறேன். அத்தையிடம் பார்த்திருக்கிறேன். தங்கை-யிடம் பார்த்திருக்கிறேன். இவர்களிடமிருந்து வராத அச்ச உணர்வு, இவளிடமிருந்து மட்டும் ஏன் வருகிறது? இவள் என் அம்மாயில்லையா? அத்தையில்லையா? தங்கை-யில்லையா? இவள் யார்? நான் ஏன் பயப்படுகிறேன். எதற்கு அழைத்துப் போகிறேன்? எங்கே அழைத்துப் போகிறேன்? என்ற கேள்விகளுக்கெல்லாம் பதில்

கிடைக்க வண்டியை நிறுத்தி அவளிடம் கேட்டேன்,

"மேடம்.. நீங்க எங்கே போகணும்?.."

"நீங்க சரக்கு அடிக்கதானே சார் போறீங்க?"

"ஆமாம். உங்களுக்கு எப்படித் தெரியும்?"


"நீங்கள் வந்ததிலிருந்து உங்களைக் கவனித்துக் கொண்டிருந்தேன். நீங்கள் ஆசிரியரா?"

"இல்லை."

"கட்சியில் ஏதாவது பெரிய பொறுப்பில் இருக்கீங்களா?"

"இல்லை. ஏன் இப்படி கேட்கிறீர்கள்? "

"நீங்க நல்லாப் பேசுனீங்க. உங்களைச் சுற்றிக் கூட்டம் இருந்து கொண்டே-யிருந்தது. உங்கள் பேச்சு எனக்கொரு நம்பிக்கையைத் தந்தது. பார்த்தவுடன் ஏதோ ரொம்ப நாள் பழகியது போல ஒரு உணர்வு. அதனால்தான் உங்களுடன் வந்துவிட்டேன். உங்களுக்குத் தொந்தரவு இல்லாத ஓர் இடத்திற்கு என்னை அழைத்துப்போங்கள். உங்களிடம் பேச வேண்டும். உங்கள் உதவி எனக்கு தேவைப்படுகிறது. நீங்கள் என்னைத் தவறாக நினைத்துப் பார்க்க வேண்டாம். நான் அப்படியான பெண் இல்லை. அந்தச் சாவு வீட்டு பந்தலில்



இருந்ததுபோல் இயல்பாக இருங்கள். அச்சப்படாதீர்கள்." எனக் கூறினாள்.

இருவரும் கிளம்பினோம். போகும் வழி விவசாய நிலப்பகுதி. சாலையின் இருபுறமும் சாகுபடி செய்யப்பட்டிருந்தது. நிலவைப் பார்த்து இளம்பயிர் கதிர்கள் சிரித்துக் கொண்டிருந்தன. சாலையில் உள்ள மேடு பள்ளங்களைத் துல்லியமாக காட்டியது நிலா. இரண்டு கிலோ மீட்டர் தூரம் போனதும், ஒரு புங்க மரத்தின் கீழ் படுத்திருந்தத மதகைப் பார்த்து வண்டியை நிறுத்தினேன். அருகில் ஓடிக்கொண்டிருந்த மோட்டார் தண்ணீரில் முகத்தைக் கழுவிவிட்டு வந்து மதகில் அமர்ந்தாள். இப்பொழுதும் அவள் கண்களில் கவலை படர்ந்திருக்கிறது. கவலையைக் கழுவிவிட முடியுமா என்ன?.

"மேடம், உங்கள் பெயர் என்ன? இந்த ஊரில் உங்களைப் பார்த்ததில்லை."

"என் பெயர் சத்தியா, நான் வெளியூர். எங்க அக்கா வீட்டிற்கு வந்து இரண்டு நாள் ஆகுது. உங்கள் பெயர் மாறன்தானே!"

"ஆமாம்."

"உங்களுக்கு என்ன உதவி வேண்டும்?" எனக் கேட்டதும், அவள் கண்களில் படர்ந்த துயரங்கள் எல்லாம் கண்ணீராய் வடிந்தது. சிறிது நேரம் கழித்து அவள் பேச ஆரம்பித்தாள்.

"மாறா என் கணவனைக் கொலை செய்யணும், அதற்கு உன் உதவி வேண்டும்"

"சத்தியா.. ஏன் இப்படிப் பேசுகிறாய்? அப்படி அவர் என்ன செய்தார்?

என்னைப் பார்த்தால் உனக்கு கொலைகாரன் போலத் தெரியுதா?

“மாறா மொதல்ல நீ சரக்கடி. அப்பொறம் சொல்றேன்.”

“எனக்கு இப்போ சரக்கு வேண்டாம்.”

“ஏன்? பயமாயிருக்கா?”

“ஆமாம், நீ பேசுவது பயமாகத்தான் இருக்கிறது.”

வண்டியில் இருந்த சரக்கை அவளே எடுத்து வந்து,

“மாறா எனக்கும் சரக்கு வேணும்.

“நீ குடிப்பியா சத்தியா?”

“ஏன் நான் குடிக்கக் கூடாதா? இன்னைக்குத்தான் குடிக்கப்போறன், அதும் உங்ககூட. “

“வேணாம் சத்தியா, குடி உடலுக்கு கேடு. “

“உனக்கு வர கேடு, எனக்கும் வரட்டுமே மாறா. எனக்கு கேடு வந்தால் உலகம் அழிஞ்சுடுமா என்ன?. நீ



கொடுக்கலன்னா நானே குடிப்பேன் மாறா.”

இரண்டு கப்பிலும் “சிட்டிங்” அளவில் சரக்கை ஊற்றி தண்ணீர் கலந்து வைத்தேன். ஒரு கப்பை எடுத்து சியர்ஸ்னு சொல்லி ஒரே மடக்கில் குடித்துவிட்டு, என் தலையை முகர்ந்துகொண்டாள்.

“மாறா! பயப்படாதே குடி. நமக்கு தலைதான் சைடிஸ். நீ கூச்சப்படாமல் என் தலையை முகர்ந்துகொள். இதெல்லாம் நம்ம சினிமாவில் கத்துக்கிட்டதுதான். இவ்வளவு காலமா ஏன் எங்களுக்கு குடி மறுக்கப்பட்டிருக்கிறது? நாங்கள் குடிச்சா உங்கள மீறி-விடுவோம்னு பயமா மாறா?”

சரக்கு ரொம்ப மட்டரகமா இருந்தது. இத எப்படிதான் இவ குடிச்சாளோன்னு நினைச்சு, அவள் தலையை முகரப் போனேன். என் கைகள் நடுங்கியது. அவ்வளவு அற்புதமான வாசனை.

“சத்தியா உன் கணவனை ஏன் கொலை செய்யச் சொன்னாய்? “

“மாறா! நான் மட்டுமில்லை. இந்தியாவில் பிறந்த ஒவ்வொரு பெண்ணும் தன் கணவனை ஒரே ஒரு கணமாவது கொலை செய்ய நினைப்பவர்கள்தான். ஆனால், நான் தினமும் நினைக்கிறேன்“.

“ஏன் இப்படி நினைக்கிறாய் சத்தியா?”

“கட்டிங் சரக்க ஊத்து சொல்லுறேன் .”

கு டி த் து வி ட் டு ஒருவருக்கு ஒருவர் தலையை மீண்டும் மீண்டும் முகர்ந்து கொண்டேயிருக்கும்போது திடீரென கேட்டாள்.

“மாறா. உனக்கு ஏன் கைகள் நடுங்குகிறது?”

“முதல் முறையாக ஒரு பெண்ணுடன் குடிக்கிறேன், அதுவும் இரவு நேரத்தில். உன் தலையை முகரும்போது என் கைகள் நடுங்குகிறது சத்தியா”.

“உனக்குத் திருமணம் ஆகிவிட்டதா? உன் வயது என்ன மாறா...?”

“இல்லை சத்தியா. வயது 38.”

“நல்லது. இப்படியே இருந்து விடு மாறா. குடும்பம் ஒரு சிறை. என்னைவிட இரண்டு வயது மூத்தவனா நீ. உன்னை வாட போடனு கூப்பிடலாமா மாறா?”

“ம்ம்ம்... கூப்பிட்டுக்கோ சத்தியா”

“மாறா! சரக்க ஊத்துடா.“

ஆப் சரக்கு காலி. எங்கள் இருவருக்கும் அமட்டல். வாந்தி வருவது போலவே இருந்தது. ஒருவருக்கு ஒருவர் முகத்தை தலையில் புதைத்துக் கொண்டோம்.

“மாறா, எதாவது சாப்பிட வேணும் பசிக்குதுடா.”

“சரி வா, வண்டில ஏறு சத்தியா.”

“எங்கடா போகணும்?”

“ அ தே தா . . ! வெளிச்சம் தெரியுதா! அது வாத்துக்காரவங்க தங்கி-யிருக்கிற வீடு. அங்கே போவம் வா.”

**வா**த்துக்காரவங்களை எழுப்பி 200 ரூபாய் கொடுத்து 10 முட்டைகளை பொறிச்சி வாங்கிட்டு திரும்பவும் புங்க மரத்திற்கு வந்து குடிக்க ஆரம்பித்தோம். சத்தியாவிற்கு போதை ஏறிவிட்டது.

“மாறா, பதினைந்து வருசமா நரக வாழ்க்கை வாழுறேன். யார்கிட்டையும்

சொல்லவும் முடியல. இனிமேல் பொருத்துக்க முடியாதுன்னு என் வீட்டுக்காரன் மேல காவல் நிலையத்தில் புகார் கொடுத்துட்டுதான் என் அக்கா வீட்டிற்கு வந்துவிட்டேன். அக்கா வீட்டுக்கு வந்தா, அக்கா புருசனும் படுக்க கூப்டான். அவனத் திட்டிட்டு, அக்காவ கூப்பிடதான் எழவு வீட்டுக்கு வந்தேன். உன்னப் பார்த்தேன். இப்ப குடிச்சிட்டு சந்தோசமா இருக்கேன். இந்த இரவு எவ்வளவு அழகாய் இருக்கிறது. நட்சத்திரங்கள் விளையாடுவதை கீரிப்பிள்ளை வேடிக்கைப் பார்க்கிறது. தவளைகள் பாடுகிறது. இதுபோல இரவை நான் பார்த்ததேயில்லை. நான் பார்த்த இரவு எல்லாம் துயரமான இரவுகள்தான். இந்த ஓர் இரவை நெஞ்சில் நிறுத்தி, இனி வரும் எல்லா இரவகளையும் எதிர்கொள்வேன் மாறா."

"சத்தியா! உன் கணவன் மேல் ஏன் புகார் கொடுத்த?"

"அந்த சைக்கோ என்ன தினமும் படுக்கக் கூப்பிடுறாம். நானும் திருந்துவான் திருந்துவானு பார்த்தேன். அவன் திருந்தவே மாட்டான். அவன் ஒரு சைக்கோ மாறா. எனக்கு இரண்டு குழந்தைகள். பொண்ணு பத்தாவது. பையன் எட்டாவது. இரண்டுயும் சீக்கிரம் தூங்க சொல்லுவாம். அவன் பெட்ரூம்க்கு வருவதற்குள் நான் போய் நிர்வாணமாய் நிக்கணும். அப்படி நிக்கலனா அடிப்பான். ஒரு நாள் படுக்குலனா, பால் வாங்கக் கூட காசு தரமாட்டான். என்னையும் வேலைக்கு போக வேணாம்னு சொல்லிட்டான். தினமும் நீ படுக்கணும்டி. இதான் உம்

வேலைனு சொல்லுவான். நான் B. SC கெமிஸ்ட்ரி படிச்சது தினமும் படுக்கவும் அடிவாங்குவதற்கும்தானா? எத்தனையோ முறை செத்துடலாம்னு நினைப்பேன். ஆனால் என் குழந்தைகளுக்காகவே நரக வாழ்க்கை வாழ்கிறேன். அவன் குடிக்க மாட்டான். அவனுக்கு நான்தான் சரக்கு. எல்லா இரவும் ஒரு செத்த பிணம் எண்ணை புணரும். இன்று இரவுதான் நான் நிம்மதியாக இருக்கிறேன். சரக்க உத்து மாறா".

"உனக்கு போதை அதிகமாயிடுச்சு. சரக்கு வேண்டாம் சத்தியா"

அவளே சரக்கு எடுத்து ஊத்தினாள். இருவரும் குடித்தோம். வாத்து முட்டை தீர்ந்து விட்டது. மாற்றி மாற்றித் தலையை முகர்ந்து கொண்டோம். அவள் பேச ஆரம்பித்தாள்.

"மாறா, உங்களுக்குக் குடிக்கவும்



தெரியாது, படுக்கவும் தெரியாது. உங்களுக்குத் தெரிஞ்சதெல்லாம் பொம்பளைங்களைத் திருப்திப்படுத்த முடியாது, திருப்திப்படுத்த முடியாதுன்னு சொல்லதாண்டா தெரியும். இததாண்டா எழுதுறீங்க. படிக்கிறீங்க. எங்களைத் திருப்திப்படுத்த ஒரே ஒரு சொல் போதும்டா. அந்தச் சொல் உங்களிடம் ஒருபோதும் இருப்பதில்லை. உங்கள் வசம் இருப்பதெல்லாம் பிழையான சொற்கள்தாண்டா.

"சத்தியா! நீ பேசுவதெல்லாம் ஆச்சரியமா இருக்கு. எங்க... நீ இப்போ ஒரே ஒரு பிழையான சொல்லைச் சொல்லு பார்ப்போம்.

"உடலுறவு. வெறும் உடலை மட்டுமே மையப்படுத்தும் "உடலுறவு" என்ற சொல்லே பிழையானதுதானே. உடலுறவு என்பது வெறும் உடல் சம்பந்தப்பட்டதுதானா? சிறிதும் மனத்திற்குத் தொடர்பு இல்லையா?"

பேசிக்கொண்டே-யிருந்தாள். நான் கேட்டுக் கொண்டேயிருந்தேன். எப்பொழுது தூங்கினோம் என்று தெரியவில்லை. கொண்டாட்டச் சாவிற்கான அடி காதில் கேட்டு விழித்துப் பார்த்தேன். மணி காலை 4.30. ஒரு குழந்தையைப்போல் என் நெஞ்சில் தலை வைத்துத் தூங்கிக் கொண்டிருந்தாள். அவளின் கூந்தல் என் முகத்தில் பரவிக்கிடந்து. நான் ஆதுரமாக வருடத் துவங்கினேன்.

# புதிய மனிதன்



கம்யூனிஸ்ட் கட்சி மாலெ மக்கள் விடுதலையின் சேர்மனும் புதிய மனிதன் ஆசிரியருமான தோழர் ஜெ. சிதம்பரநாதன் அவர்களின் தாயார் திருமதி வேதவள்ளி அவர்கள் சமீபத்தில் இயற்கையெய்தினார். புதுக்கோட்டை மாவட்டத்தின் முதல் பெண் தலைமையாசிரியர் என்பது அம்மா அவர்களின் தனித்துவச் சிறப்பு.

மக்கள் விடுதலைக்காய் அல்லும் பகலும் சமரசமின்றிக் களமாடிடும் போராளி மகனை தமிழ் மண்ணிற்கு ஈன்று புறந்தந்த அம்மா அவர்களுக்கு புதிய மனிதனின் மலரஞ்சலி.

# திரைக்குப் பின்னாலும் கதை உண்டு

இயக்குனர் ருத்ரன்

அது, கொரோனா தாண்டவமாடிய 2020-21 காலம். தொழிற்சாலைகள், வணிக நிறுவனங்கள், சிறுகடைகள், அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள், அலுவலகங்கள், திரையரங்குகள் ஆகியவை அனைத்தும் மூடப்பட்டிருந்த நெருக்கடியான சூழல். வெளியில் நடமாடினால்கூட காவல்துறைக்கு தண்டம் கொடுக்க வேண்டியிருந்த கொடுமையான நிலை. நான், கொரோனாவால் தாக்கப்பட வில்லையென்றாலும்,



கொரோனா விதித்தத் தடைகளால் தாக்கப்பட்டேன். கொரோனாவுக்கு அஞ்சி அரசாங்கம் அறிவித்த முதல் ஊரடங்கின் தொடக்க நாளான 2020, மார்ச் 23-க்கு இரண்டு நாட்களுக்கு முன்பு, நல்வாய்ப்பாக, படப்பிடிப்பு முற்றுப் பெற்றது. தப்பித்தோம், பிழைத்தோம் எனும் மகிழ்ச்சி ஒருபுறம். பின்தயாரிப்புப் (Post Production) பணிகள் செய்வதற்கு ஏதுவாக ஊரடங்கு எப்போது முடிவுக்கு வருமோ எனும் கலக்கம் மறுபுறம். நீண்டுகொண்டே போனது ஊரடங்கு. இடையில் ஒருசில தளர்வுகள். மீண்டும் கடுமைகள். எந்தத் தளர்வும் திரைத்துறையை எட்டிப் பார்க்கவில்லை.


ஏறத்தாழ ஆறு மாதங்களுக்குப் பிறகு, திரைப்படங்களின் பின்தயாரிப்புப் பணிகளைக் குறைந்த அளவு ஆட்களை வைத்து செய்துகொள்வதற்கு அரசு அனுமதித்தது. நான், 2020 செப்டெம்பரில் இந்தப் பணிகளைத் தொடங்கும்போதே, 2021 ஏப்ரல் மாதத்தில் நடைபெறவிருக்கும் தமிழ்நாடு

சட்டப்பேரவைத் தேர்தலுக்கு முன்னதாக படத்தை வெளியிட வேண்டும் என முடிவு செய்தேன். ஏனென்றால், '₹2000' திரைப்படத்திற்கும் தேர்தலுக்கும் ஆழமான தொடர்பு இருப்பதை அறிந்திருந்தேன். பாஜக அரசின் மக்கள் விரோத அரசியலையும், மோடி தலைமையிலான ஒன்றிய அரசின் மக்கள் நலனுக்கு எதிரான நடவடிக்கைகளையும் படத்தின் கதையோட்டத்தில் சேர்த்திருந்தேன்.

ஒரு 2000 ரூபாய் தாளினை வைத்திருந்தும், அதனை செல்லுபடியாக்க முடியாமலும் தனது பச்சிளங் குழந்தைக்கு மருத்துவம் பார்க்க இயலாமலும் அக்குழந்தையை சாவுக்குக் கொடுக்கும் ஏழை விவசாயி ஒருவர், ஒன்றிய அரசின் மீது கொலைக்குற்ற வழக்குத் தொடுத்து, அரசுக்கு தண்டனைப் பெற்றுத் தருவதுதான், கதை. இதனூடாக, மோடி அறிவித்த, 'பணமதிப்பிழப்பு நடவடிக்கை'யின் தீய விளைவுகளும் நாட்டில்

நடந்த அலங்கோலங்களும் அம்பலப்படுத்தப் படுகிறது. கூடவே, சாதிய வேரினைத் தீக்கிரையாக்கும் கிளைக்கதையும் உண்டு.

திரைப்படத்தின் அனைத்துப் பணிகளும் நிறைவடைந்து, பிப்ரவரி 2021ல் தணிக்கை சான்றிதழுக்காக அனுப்பப்படுகிறது. ஐந்து பேர் கொண்ட தனது குழுவினருடன் படத்தைப் பார்த்த சென்னை மண்டலத் தணிக்கை வாரியத்தின் தலைமை அலுவலர் லீனா மீனாட்சி, என்னிடம் எதுவும் விவாதிக்காமலேயே, ஒரே வார்த்தையாக, “படத்திற்குத் தடை விதிக்கிறேன்“ என்று சொல்கிறார். நான், “நன்றி” என்று சொல்லிவிட்டு வெளியேறுகிறேன்.




படத்தை மறுஆய்வுக் குழு (Revising Committe) விடம் கொண்டுபோவதற்கான பணிகள் முடிந்தபோது, தேர்தல் பரப்புரை சூடுபிடிக்கிறது. மறுஆய்வுக் குழுவின் தலைவர் நடிகை கவுதமி, பாஜக-வுக்கு ஆதரவாக தேர்தல் பணிகளில் இருப்பதால் தேர்தல் முடிந்த பின்தான் அவரால் படம் பார்க்க இயலும் என்னும் தகவலைத் தணிக்கை வாரிய அலுவலகம் தெரிவிக்கிறது. இவ்வாறு, தேர்தல் காலத்தில் படத்தை வெளியிட வேண்டும் என்னும் திட்டம் சிதைக்கப்பட்டது.

ஒருவழியாக, தேர்தல் முடிந்த மூன்றாவது நாளில், பத்துபேர் கொண்ட தனது குழுவினருடன் நடிகை கவுதமி படத்தைப் பார்த்தார். இரண்டரை மணி நேரம் ஓடக்கூடிய படத்தைப் பார்த்துவிட்டு மூன்றரை மணி நேரம் அவர்களுக்குள்ளாகவே விவாதித்தனர். நான் வெளியே காத்திருந்தேன். *2 1/2+3 1/2=6* மணி நேரத்திற்குப் பிறகு நான் அழைக்கப்பட்டேன்.

படத்தின் தலைப்பான, '₹2000' என்பதற்குக் கீழே சிறிய எழுத்தில் போடப்பட்டிருந்த, 'காகிதம்' என்னும் துணைத் தலைப்பினை நீக்கவேண்டும்

என்பதிலிருந்து தொடங்கியது, வெட்டுகளின் பட்டியல். பள்ளிக் குழந்தைகள் வாய்ப்பாடு ஒப்பிப்பதைப் போல மண்டல அலுவலர் லீனா மீனாட்சி வெட்டுகளை சொல்லச் சொல்ல, அவைகளுக்கான காரணங்களை சொல்லிக் கொண்டிருந்தார், கவுதமி. நான் வினா எழுப்பினாலோ அல்லது விளக்கம் அளிக்க முனைந்தாலோ, “அதெல்லாம் வேணாங்க சார். இதையெல்லாம் நீக்குங்க, அவ்ளதான்.” எனும் வார்த்தைகள்




மட்டுமே திரும்பத் திரும்ப சொல்லப்பட்டது. கூடவே, “எனக்கு இந்தப் பதவியைக் கொடுத்தது பிஜேபி. அந்தக் கட்சியையும் அதனுடைய ஆட்சியையும் விமர்சிக்கிற காட்சிகள என்னால எப்படி

அனுமதிக்க முடியும்?" என்னும் கேள்வியைக் கேட்டு தன்னைத்தானே கவுதமி வெளிப்படுத்திக் கொண்டார்.

ஒரு கட்டத்தில், 'முன்முடிவோடு இருக்கும் இவர்களோடு பேசிப் பயனில்லை' என்னும் முடிவுக்கு வந்த நான், அமைதியாக, லீனா மீனாட்சி சொல்லும் வெட்டுகளைக் குறித்துக் கொள்பவனாக ஆகிப்போனேன். அதன் பிறகு, கவுதமியின் பேச்சுகளை நான் பொருட்படுத்தவேயில்லை. இறுதியாக, நூற்றுக்கும் அதிகமான வெட்டுகள். மட்டுமன்றி, வசனவொலி நீக்கங்கள் சில. ஆக, படம் குதறப்பட்டு விட்டது. '₹2000' திரைப்படம், அதன் மீதான கருத்தியல் வன்முறையால் அதன் இயல்பினை இழந்துவிட்டது.

கூட்ட அரங்கிலிருந்து நான் வெளியேறும்போது கவுதமி சொன்னார் : "சார், படத்துல நல்ல கருத்த சொல்லி-யிருக்கீங்க. சில காட்சிகளப் பாக்கறப்போ, நானே சில புதிய கருத்துகள தெரிஞ்சிகிட்டேன். இந்தப் படம் மக்கள் கிட்ட போய்ச் சேரணும். வாழ்த்துகள்."

‘மக்கள் கிட்ட சேர்க்கிறதுக்கு என்ன விட்டு வெச்சிருக்கீங்க?’ என உள்ளுக்குள் எரிந்தபடி, “நன்றி” சொல்லி வெளியேறினேன்.

தணிக்கைத் துறை சொல்லியவற்றையெல்லாம் நீக்கினால், இரண்டரை மணி நேரப் படம் ஒரு மணி நேரம்கூட மிஞ்சாது. காட்சிகளில் தொடர்ச்சியும் இருக்காது, காட்சிகளுக்கு இடையிலான தொடர்பும் இருக்காது. மொத்தத்தில், படத்தின் கரு கலைக்கப்பட்டு விட்டது, படம் சீரழிக்கப்பட்டு விட்டது.

இனி, கதைக்கான ஆதாரங்களையும் காட்சிகள் மற்றும் வசனங்களுக்கான ஆவணங்களையும் திரட்டிக் கொடுத்து வெட்டுகளைக் குறைத்தாக வேண்டும். அதுதான் இப்போது இருக்கும்



ஒரே வழி. கதை மற்றும் காட்சிகளுக்கான ஆதாரங்கள் ஏற்கெனவே என்னிடம் இருப்பதால் அதற்கான தேடல் அவசியமில்லை. ஆனால், வெட்டுகளைத் தவிர்ப்பதற்கு என்ன செய்வது...

குறிப்பாக, வழக்காடு மன்றத்தின் சுவரில் மாட்டப்பட்டிருக்கும் அம்பேத்கர் நிழற்படத்தை நீக்கவேண்டும் என்கிறார்களே! அந்த நிழற்படத்தையும் அது தெரியும் காட்சித் துணுக்கு (Shots)களையும் எப்படிக் காப்பாற்றுவது... திருக்குறளை உச்சரிக்கக் கூடாது என்கிறார்களே, அதை எப்படி மீட்டெடுப்பது... ஒன்றிய அரசின் நிதியமைச்சரையும் ரிசர்வ் வங்கியின் தலைவரையும் சாட்சியம் சொல்வதற்காக வழக்காடு மன்றத்திற்கு அழைக்கும் அதிகாரம் வழக்காடு மன்ற நடுவருக்கு இல்லை என்கிறார்களே, அதனை எப்படி முறியடிப்பது... ‘கடவுள்’, ‘கோயில்’, ‘சனாதனம்‘,’பார்ப்பனியம்‘, ‘கார்ப்பரேட்‘ ஆகிய சொற்களை நீக்கவேண்டும் என்கிறார்களே, இவைகளை நிஜ வாழ்க்கையிலிருந்து

நீக்கவேண்டும் என்றால் ஏற்கலாம். ஆனால், படத்தில் தக்கவைத்தாக வேண்டுமே, அதற்கு என்ன செய்வது...

படத்தில் தோழர் ஓவியா நடித்திருந்ததால், அவரால் உணர்வு பூர்வமாக உதவ முடியும் எனக் கருதி, அவருடன் தொடர்பு கொண்டேன். அவர், ஓய்வுபெற்ற நடுவர் அரி பரந்தாமன் அவர்களிடம் சொல்லி ஆவன செய்வதாக சொன்னார். மறுநாள் தொடர்புக்கு வந்த தோழர் ஓவியா,

“நீங்கள் கம்யூனிஸ்ட் என்பதால் உங்களுக்கு உதவமுடியாது என்று சொல்லிவிட்டார். பெரியாரியத்தோடு அவர் நின்று கொள்கிறாராம். இப்படி அவர் சொன்னதில் எனக்கு வருத்தம்தான், தோழர் “ என்றார். “எனக்கு உதவிட நினைத்ததற்கு நன்றி, தோழர் “ என சொல்லிவிட்டு யோசிக்கத் தொடங்கினேன்.

தோழர் தியாகு அவர்கள் நினைவில் வந்தார். படத்தில் அவரும் நடித்திருந்தார். அவருடன் தொடர்பு கொண்டேன். தான்

வெளியூரில் இருப்பதாகவும், ஆவணங்களைத் தேடிக் கண்டெடுத்து இரண்டு நாட்களில் அனுப்பி வைப்பதாகவும் கூறினார். அடுத்து தோழர்- வழக்குரைஞர் சங்கரசுப்பு அவர்களை சந்தித்தேன். விரிவாகவும் விளக்கமாகவும் பேசிய அவர், அம்பேத்கர் நிழற்படத்தை SBI வங்கியில் வைத்ததற்காகத் தற்காலிகப் பணிநீக்க நடவடிக்கைக்கு உள்ளான ஒருவர் தொடுத்த வழக்கில், அம்பேத்கர் நிழற்படத்தை வைத்தது தவறில்லை என்னும் அரசாணை கிடைத்திருப்பதாகவும், இதுகுறித்து மேலதிக விபரங்கள் தனது ஜூனியர் வழக்குரைஞர் ரமேஷிடம் கிடைக்கும் என்றும் சொல்லி, வழக்குரைஞர் ரமேஷ் அவர்களின் அலைபேசி எண்ணினைக் கொடுத்தார். நான், வழக்குரைஞர் ரமேஷ் அவர்களுடன் பேசினேன். வழக்குத் தொடுத்திருந்த வங்கிப் பணியாளர் கவுரிசங்கர் அவர்களிடமிருந்து அரசாணையைப் பெற்று அனுப்பி வைத்தார்.

அரசு அலுவலகங்களில் அம்பேத்கர் உள்ளிட்ட சில அரசியல் மற்றும் அரசுத் தலைவர்களின் நிழற்படங்களை வைப்பதற்கான உரிமை, குடியரசுத் தலைவர் உள்பட அனைவரையும் வழக்காடு மன்றத்திற்கு அழைப்பதற்கான நடுவரின் அதிகாரம் ஆகியவைகள் குறித்த ஆவணங்களையும் அரசாணைகளையும் தோழர் தியாகு அனுப்பி வைத்தார். இந்நிலையில், தோழர்-வழக்குரைஞர் பாவேந்தன் அவர்களும் சில சட்டக் குறிப்புகளை அனுப்பி-யிருந்தார்.

இவ்வாறாக, ஆதாரங்கள், அரசாணைகள், ஆவணங்கள் ஆகியவை அடங்கிய 35 பக்கங்கள் கொண்ட தொகுப்பு,



தணிக்கை வாரியத்திற்கு கொடுக்கப்பட்டது. இத்தகைய நிரூபணங்கள் கொடுக்கப்பட்டால், UA சான்றிதழ் வழங்கப்படும் என தணிக்கை வாரியம் உறுதி அளித்திருந்தது. ஆபாசம், கவர்ச்சி, இரட்டை அர்த்த வசனங்கள், வன்முறை எதுவுமில்லாத நிலையில், U சான்றிதழ் பெறுவதற்கு முழுத்தகுதி பெற்ற திரைப்படத்திற்கு UA சான்றிதழ் கொடுப்பதற்கு, தணிக்கை வாரிய சட்டத்திற்குப் புறம்பாக தணிக்கை வாரியம் முடிவு செய்தது. இத்தகைய சூழலில், புதுடில்லியில் இயங்கும் ஒன்றிய தீர்ப்பாயம் (Tribunal) மட்டுமே உச்சபட்ச போக்கிடமாக இருந்தது. அதற்கான நடைமுறைகளைத் தொடங்கினோம். கெடுவாய்ப்பாக, ஓரிரு நாட்களுக்குப் பிறகு, தீர்ப்பாயத்தைக் கலைத்துவிட்டதாக ஒன்றிய அரசு அறிவித்தது. அந்த நேரத்தில், பல்வேறு துறைகள் சார்ந்த தீர்ப்பாயங்களைக் கலைக்கும் செயலில் ஒன்றிய அரசு ஈடுபட்டிருந்தது. இனி மிச்சமிருக்கும் ஒரேவழி, வழக்காடு மன்றத்தை நாடுவதேயாகும். ஆனால்,

கொரோனா ஊரடங்கால் ஏற்பட்ட தாமதம், தணிக்கைத் துறையால் உருவாக்கப்பட்ட காலவிரயம் ஆகியவைகளால் கடுமையாக பாதிக்கப்பட்டு இருப்பதால், வழக்குத் தொடுப்பதால் ஏற்படும் கால நீட்டிப்பினைத் தாங்குகிற நிலையில் இல்லை. எனவே, UA சான்றிதழைப் பெற்றுக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

இழுத்தடிப்பு, அலைக்கழிப்பு போன்ற தந்திர உத்திகளால் சோர்வினை உண்டாக்கினால், தாம் சொல்வதையெல்லாம் கேட்கும் வகையில் சரணாகதி அடையவைத்துவிடலாம் என்னும் தணிக்கை வாரியத்தின் கணக்கு, தப்புக் கணக்காகிப் போனது. சமரசமற்ற தொடர் முயற்சிகளுக்குப் பிறகு-ஏறத்தாழ ஆறு மாதங்களுக்குப் பின்னர், தணிக்கை வாரியத்-திலிருந்து தகவல் வந்தது : "UA சான்றிதழுக்கான உத்தரவு வந்துவிட்டது. ஆனால், ஒரு சிக்கல். படத்தின் தலைப்பான '₹2000' என்பதில் உள்ள, '₹' குறியீட்டினைப் பொருத்த முடியவில்லை. மும்பை அலுவலகத்திற்கு செய்தி அனுப்பியிருக்கிறோம்.

அங்கிருந்து பதில் வந்தவுடன் சான்றிதழ் வழங்கப்படும்.”

இனியும் பொறுப்பதற்கில்லை என்னும் முடிவுக்கு வந்துவிட்டேன்.“ ₹2000 என ரூபாய் தாளினை அச்சடிக்கும் ஒன்றிய அரசால், ‘₹‘ என்னும் குறியீட்டினைப் பொருத்த இயலாது என்று சொல்வது வேடிக்கையானதும் முட்டாள்தனமானதும் மட்டுமல்ல, உள்நோக்கம் கொண்டதுமாகும்“ எனக் கடுமையாகவே பேசினேன். “இத்தனைக் காலம் பொறுத்திருந்தீர்கள், இன்னும் ஒரு வாரம் பொறுத்திருங்கள்” என தணிக்கை வாரிய அலுவலகம் கேட்டுக்கொண்டது.

ஒரு வாரத்திற்குப் பிறகு தொடர்பு கொண்டேன். “சான்றிதழில் ‘₹‘ குறியீட்டினைப் பொருத்து வதற்கு சாத்தியம் இல்லை என மும்பை அலுவலகமும்



சொல்லிவிட்டது. என்ன செய்வது என யோசித்துக் கொண்டிருக்கிறோம்." என சொல்லப்பட்டது. "மும்பையே கைவிட்ட பிறகு சென்னையால் ஒன்றும் சாதிக்க முடியாது" என்று சொன்ன நான், ஒரு தீர்வினை முன்வைத்தேன். '₹' என்பதைப் பேனாவால் எழுதும்படி சொன்னேன். பேனாவில் எழுதி சான்றிதழ் கொடுப்பது முறையல்ல என தணிக்கை வாரியம் தெரி-வித்தது.

"முறையற்றது என எதிர்க்க வேண்டியவன் நான்தான். நானே சம்மதிக்கும்போது நீங்கள் தயங்க வேண்டாம். ஏற்கெனவே எனது அரை வருடத்தை விழுங்கி விட்டீர்கள்." என்றேன். கூடவே, இதையும் சொன்னேன் : பேனாவில் எழுதப்படும், '₹' குறியீட்டின் அருகில், மண்டல அலுவலர் லீனா மீனாட்சியின் கையொப்பமும் தணிக்கை வாரியத்தின் முத்திரையும் இடம்பெற வேண்டும்."

எனது ஆலோசனை குறித்து மண்டல அலுவலரிடம் பேசிவிட்டு தொடர்பு கொள்வதாக சொல்லப்பட்டது.

அடுத்த நாள், நேரில் வந்து சான்றிதழைப் பெற்றுக்கொள்ளும்படி அழைப்பு வந்தது.

நான் அறிந்த வரையில், தமிழ்த் திரைப்பட வரலாற்றில் (இந்தியத் திரைப்பட வரலாற்றில் எனக் குறிப்பிட்டாலும் தவறாகாது என கருதுகிறேன்), பேனாவில் எழுதப்பட்டு, சான்றிதழில் இரண்டு இடங்களில், அதாவது, மேல்பகுதியில் படத்தின் தலைப்பு இருக்கும் இடத்திலும், கீழ்பகுதியில் வழக்கமான இடத்திலும் மண்டல அலுவலரின் கையொப்பமும் வாரிய முத்திரையும் இடம்பெற்ற திரைப்படம், '₹2000' படமாகத்தான் இருக்கும்.

இவ்வாறுதான், நீண்ட நெடிய, சமரசமும் பின்வாங்கலும் அற்ற போராட்டத்தின் மூலம் நரேந்திர மோடியின் ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் இயங்கும் திரைப்படத் தணிக்கை வாரியத்தின் திட்டமிட்ட தடைகளை வென்று, '₹2000' படம், திரையரங்குகளில் திரையிடப்பட்டது.

**பின்குறிப்பு :**

இத்திரைப்படம் தொடர்பான மேலும் சில அனுபவங்களை, வாய்ப்பிருப்பின், எழுதுவேன். அந்தப் பதிவுகளில், காட்சி ஊடகம், அச்சு ஊடகம், சமூக இயக்கங்கள், முற்போக்கு மற்றும் புரட்சிகர அமைப்புகள், கலை-இலக்கிய சங்கங்கள் ஆகியவைகளின் '₹2000' திரைப்படம் மீதான திட்டமிட்ட புறக்கணிப்பையும், உள்நோக்கம் கொண்ட பாராமுகத்தையும் அம்பலப்படுத்துவேன். கூடவே, மக்களுக்கான திரைப்படங்கள் எடுக்கப்பட வேண்டும் என முழங்கிக் கொண்டிருக்கும் விமர்சன ஜாம்பவான்களின் இந்தப் படம் மீதான கள்ளமவுனத்தையும் கேள்விக்குள்ளாக்குவேன்.



# மக்கள் விடுதலைப் பண்பாட்டுப் பேரியக்கத்தின் கோயம்புத்தூர் மாவட்ட அமைப்புக் குழு உதயம்

கடந்த 04.06.2022 அன்று மக்கள் விடுதலைப் பண்பாட்டுப் பேரியக்கத்தின் கோயம்புத்தூர் மாவட்ட அமைப்புக் குழு உதயமானது. இசைக் கலைஞர் தோழர் குணமகன் அவர்கள் தலைமையேற்க தோழர்கள் திரை இயக்குநர் மனோகரன் மற்றும் புஷ்பராஜ் அவர்களின் துவக்கப்பாடலோடு கூட்டம் இனிதே துவங்கியது.




மக்கள் விடுதலைப் பண்பாட்டுப் பேரியக்கத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் தோழர் பாட்டாளி அவர்களின் நோக்கவுரைக்குப் பின்னர் கோவை மாவட்ட அமைப்புக் குழு தேர்வு செய்யப்பட்டது. தோழர்கள் இசைக் கலைஞர் குணமகன் ,திரை இயக்குநர் மனோகரன், புஷ்பராஜ், தம்பிதுரை, ஒடியன் நாவலாசிரியர் லெட்சுமணன், ராஜேந்திரன், மார்ட்டின், மருத்துவர் ஆசிக் ஆகிய எட்டு தோழர்கள் கொண்ட மக்கள் விடுதலைப் பண்பாட்டுப் பேரியக்கத்தின் கோயம்புத்தூர் மாவட்ட அமைப்புக் குழு உருவாக்கப்பட்டது. பின்னர் மாவட்ட அமைப்புக் குழுவிலிருந்து இசைக்



கலைஞர் தோழர் குணமகன் மாவட்ட அமைப்பாளராகத் தேர்வு செய்யப்பட்டார்.

கோவை மண்ணில் கடந்த நாற்பதாண்டுகளுக்கும் மேலாக பாவேந்தர் பாரதிதாசன் இலக்கியப் பேரவையை நடத்திவரும் மூத்த முன்னோடி எழுத்தாளர் தோழர் தம்பிதுரை அவர்களும், கம்யூனிஸ்ட் ஒற்றுமை மேடையின் ஒருங்கிணைப்பாளர் தோழர் அஜாய்கோஷ் அவர்களும் வாழ்த்துரை வழங்க, தோழர் மார்ட்டின் அவர்களின் நன்றியுரையோடு அமைப்புக்குழுக் கூட்டம் இனிதே நிறைவடைந்தது.



# மக்கள் விடுதலைப் பண்பாட்டுப் பேரியக்கத்தின் புதுக்கோட்டை மாவட்ட அமைப்புக் குழு உதயம்

26,06,2022 அன்று மக்கள் விடுதலைப் பண்பாட்டுப் பேரியக்கத்தின் புதுக்கோட்டை மாவட்ட அமைப்புக் குழு இனிதே உதயமானது. மக்கள் விடுதலைப் பண்பாட்டுப் பேரியக்கத்தின் மாநில ஒருங்கிணைப்புக் குழுத்தோழர் வீரக்குமார்



அவர்கள் தலைமையேற்க துவக்கப்பாடலோடு கூட்டம் துவங்கியது.

மக்கள் விடுதலைப் பண்பாட்டுப் பேரியக்கத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் தோழர் பாட்டாளி அவர்களின் நோக்கவுரைக்குப் பின்னர் புதுக்கோட்டை மாவட்ட அமைப்புக் குழு தேர்வு செய்யப்பட்டது. தோழர்கள் மெய்யர், தேவிகா, அஜீத்குமார், பகத்சிங், வேதரத்தினம் ஆகிய அய்ந்து தோழர்கள் கொண்ட மக்கள் விடுதலைப் பண்பாட்டுப் பேரியக்கத்தின் புதுக்கோட்டை மாவட்ட தோழர் மெய்யர் அவர்களின் அமைப்புக் குழு உருவாக்கப்பட்டது. பின்னர் மாவட்ட அமைப்புக் குழுவிலிருந்து தோழர் மெய்யர் மாவட்ட அமைப்பாளராகத் தேர்வு செய்யப்பட்டார்.

கம்யூனிஸ்ட் கட்சி மாலெ மக்கள் விடுதலையின் புதுக்கோட்டை மாவட்டச் செயலாளர் தோழர் முத்துலெட்சுமி அவர்களும், கம்யூனிஸ்ட் கட்சி மாலெ மக்கள் விடுதலையின் பொதுச் செயலாளர் தோழர் க.சீ. விடுதலைக்குமரன்

அவர்களும் வாழ்த்துரை வழங்க, மக்கள் விடுதலைப் பண்பாட்டுப் பேரியக்கத்தின் மாநில ஒருங்கிணைப்புக் குழுத்தோழர் அருண்குமார் அவர்களின் நன்றியுரையோடு அமைப்புக்குழுக் கூட்டம் இனிதே நிறைவடைந்தது.



எங்களின் தாகம்

சாதி ஒழிந்த

தன்னாட்சி கொண்ட

சோசலிசத் தமிழ்நாடு